[1972 மார்ச் 18

சாத்தூர் வட்டத்திலுள்ள தீப்பெட்டி தொழிற்சாலைகள்

* 556 வினா—திரு. எஸ். அழகுத் தேவர் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசின் தீப்பெட்டி பண்ட்ரோல் முறை எடுக்கப் பட்டதனால், சாத்தூர் வட்டத்தில் உள்ள சிறிய தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு சுமார் 800 சிறிய தீப்பெட்டி தொழிற்சாலைகள் மூடும் தருவாயில் உள்ளது பற்றி அரசுக்கு தகவல் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) தீப்பெட்டி பண்ட்ரோல் முறையை மறுபடியும் அமுலுக்குக் கொண்டு வரவேண்டும் என மத்திய அரசை இருமுறை இந்த அரசு கேட்டுக்கொண்டது. ஆனால் மத்திய அரசு உள் நாட்டுப் பொருள் வரி கொடாமல் ஏமாற்றுவதைத் தடுக்க தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும், பண்ட்ரோல் முறையைத் திரும்ப அமுல்படுத்த இயலாதெனவும் தெரிவித்துவிட்டது. இவ்வரசு இப்பொழுது மூன்றாவது தடவையாக மத்திய அரசை இவ் விஷயமாய் அணுகியுள்ளது.

திரு. எஸ். அழகுத் தேவர் : தலைவர் அவர்களே, இந்த பண்ட்ரோல் முறையை எடுத்துவிட்டதாலே அவர்கள் ரொம்ப கஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். இந்த பண்ட்ரோல் முறையை மீண்டும் கொண்டுவந்தால்தான் தீப்பெட்டித்தொழில் நல்ல முறையில் இயங்கும் என்பதை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பண்ட்ரோல் முறை இருக்குமானால் வரி ஏய்ப்புச் செய்யமுடியாது என்று சிறிய உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் சொல்கிறார்கள். பண்ட்ரோல் முறை இருக்கின்ற காரணத்தினால் வரி ஏய்ப்பு நடக்கிறது. இது இல்லாமலே வரி ஏய்ப்பைத் தடுக்கமுடியும் என்பது மத்திய அரசாங்கத்தினுடைய வாதம் ஆகும். பண்ட்ரோல் முறை வரவேண்டுமென்று சிறிய அளவில் தொழில் செய்கிறவர்கள் முதல் பெரிய பணக்காரர்கள் வரை வலியுறுத்திவருகிறார்கள். ஆகவே இதுபற்றி மத்திய அரசுதான் முடிவு எடுக்கவேண்டும்.

1972 மார்ச் 18]

திரு. கா. காளிமுத்து: இந்த முறையை எடுப்பதன் மூலமாக வரி ஏய்ப்புச் செய்கிறவர்கள்தான் லாபம் பெறமுடியும். ஆனால் வரி ஏய்ப்புச் செய்யாமல் ஒழுங்காக தீப்பெட்டித் தொழில் நடத்துகின்ற உற்பத்தியாளர்களும் கூட்டுறவுச் சேவை சங்கங்களும் ஊதிய இழப்புக்கு ஆளாகின்றன. எனவே மீண்டும் அதைக் கொண்டுவர வேண்டுமென்று நம்முடைய அரசு மத்திய அரசை வலியுறுத்துமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அப்படித்தான் நாம் இரண்டு முறைகள் வற்புறுத்தியிருக்கிறோம். இப்பொழுது மூன்றாவது முறையாக வற்புறுத்த முனைந்து இருக்கிறோம். ஆனால் யார் வரியை ஏய்க்கிறார்கள் என்பது சந்தேகத்திற்குரிய செய்தியாகும். சிறு தொழில் செய்கிறவர்கள், கூட்டுறவுத் துறைகள் இந்த முறை வேண்டுமென்று கேட்டு இருக்கிறார்கள். பெரிய பணக்காரர்களாக இருக்கிற உற்பத்தியாளர்களில் ஒருவர் போராட்டத்திற்குத் தலைமைதாங்கி நாங்கள் எல்லோருமே வரி ஏய்ப்புச் செய்யமாட்டோம் என்று சொல்லியும் ஏன் மத்திய அரசாங்கம் தயக்கம் காட்டுகிறது என்பது தெரியவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, இந்த முறையால் சாத்தூர், சிவகாசியில் ஓரளவுக்கு நல்லமுறையில் நடந்து கொண்டு வருகிறது. இதிலே பாதிக்கப்பட்டிருப்பதாக தங்களுடைய அதிருப்தியைக் காண்பிப்பதற்காக ஒரு அடையாள வேலைநிறுத்தம் செய்திருக்கிறார்கள். எனவே அரசு இதைப் பரிசீலனைசெய்து யாருக்கு வரிவிலக்குக் கொடுக்க வேண்டுமோ அவர்களுக்கு வரி விலக்குக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: வரி விலக்கு என்ற பிரச்னைக்கு இதிலே இடம் இல்லை. அந்த முறையைக் கொண்டுவந்தால் வரி ஏய்ப்பு இருக்காது என்று அவர்கள் சார்பில் கூறப்படுகிறது. ஆனால் அந்த முறையை கொண்டுவந்தால் வரி ஏய்ப்பு நடைபெறும் என்று மத்திய அரசு சொல்லுகிறது. அதைத்தான் மத்திய அரசாங்கம் மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டு இருக்கிறோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் கொண்டுவந்தால் வரி ஏய்ப்பு இருக்கும் என்று சொல்வதாகச் சொன்னார்கள். அவர்கள் அப்படிச் சொல்வதிலே உண்மை இருக்கிறதா இல்லையா என்று நம்முடைய அரசு ஆய்ந்திருக்கிறதா? அவர்கள் சொல்வதில் உண்மை இருக்கிறது என்று நினைக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1972 மார்ச் 18

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அதற்குத்தான் முன்னரே நான் சொன்னேன். சிறிய தொழிலதிபர்கள், கூட்டுறவுச் சங்கங்கள் இதிலே சட்டவிரோதமாக நடக்கமுடியாது என்ற காரணத்தினாலே அவர்கள் அந்த முறையைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்கிறார்கள். சட்டவிரோதமாகத் தப்புகிறார்கள் என்ற வாதத்தை மத்திய அரசாங்கம் வைக்கிறது. நடைமுறையிலே அப்படிச் செய்ய முடியாது என்று சொல்லி பெரிய பணக்காரர்கள் தொழில் செய்கிறவர்கள்கூட அந்த முறையைக் கொண்டுவர வேண்டுமென்று சொல்கிறார்கள் என்ற காரணத்தினால்தான் மத்திய அரசாங்கம் தயக்கம் காட்டுகிறது.

திரு. செ. கந்தப்பன்: அந்த வட்டாரத்தைச் சேர்ந்த இந்திரா காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தலைமை வகித்து மாபெரும் போராட்டம் நடத்தப்போவதாகச் செய்தி வந்ததே? அது நடந்துகொண்டிருக்கிறதா. அதற்குச் சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் அதற்கு ஆதரவு கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல் போராடப்போகிறோம் என்று ஒரு நாடாளுமன்ற உறுப்பினரே சொல்லியிருப்பதாக பத்திரிகையிலே அறிக்கை வந்தது. அது அவர்களுடைய அரசாங்கம். அவர்கள் அவர்களோடு போராடுவதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை.

விசைத்தறிகள்

* 557 வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இலங்கை, பர்மா அகதிகளுக்கு வேலை அளிப்பதற்காக இராமநாதபுரம், கோவை, நெல்லை, வட ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் கூட்டுறவுத் துறையில் விசைத்தறி ஆலைகள் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஆம்.

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, இந்த விசைத்தறி ஏற்படுத்தும்போது எந்த எந்த அடிப்படையிலே அகதிகள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்பதை விவரங்களோடு கூற முடியுமா?